**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(1, 2 வாதிகள் ஆஜர் . 1ம் பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.536/2022

பி.வா.சா.1 பிரசாத், த/பெ.செங்கோட்டுவேல்

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. சகோதரிகள் என்ன வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேன். வாதிகள் தங்களுடைய அம்மாவின் சொத்துக்களில் பங்கு உள்ளது என்று கூறி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது தாயார் பாப்பு என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. எனது தாயார் 09.02.2019ல் இறந்துவிட்டார். எனது தாயார் இறந்த தேதியில் நான், என்னுடைய தந்தை மற்றும் என்னுடைய சகோதரிகள் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது என்னுடைய தந்தை இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3. நான் Software Engineer ஆக சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். 6ம் வகுப்பிலிருந்து 11ம் வகுப்புவரை நான் ஹாஸ்டலில் தங்கி அரசு உதவி பெறும் பள்ளியான நிர்மலா மேல்நிலைப்பள்ளி, கொளத்தூரில் படித்தேன். 12ம் வகுப்பில் நான் ஹாஸ்டலில் தங்கி வித்ய விகாஸ் பள்ளி, திருச்செங்கோட்டில் படித்தேன். நான் மாதம்மாள் சீலா கல்லூரி எருமப்பட்டியில் படித்தேன்.

4. எனக்கு 2011ம் வருடம் நவம்பர் மாதம் திருமணமானது. சென்னையில் நான் வேலைக்கு சேர்வதற்கு முன்பு 3 வருடகாலமான 1ம் வாதியான சசிகலா வீட்டில் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது எனது

தகப்பனார் எனது மனைவியின் தாலிக்கொடிக்காக 7 1/2 பவுன் செய்துபோட்டாரா என்றால் சரியல்ல என்னுடைய திருமண செலவுகள் அனைத்தும் நான் தான் பார்த்துக்கொண்டேன்.

5. திருமணத்தின் போது எனக்கு வயது 29 ஆகும். திருமணத்தின்போது எனக்கு மாத சம்பளம் ரூ.40,000/– என்றால் சரிதான். திருமணத்தின் போது வாதிகள் எனக்கு 3 பவுனில் பேரேஸ்லெட் போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ஆர்சி நடுநிலைப்பள்ளி, நாமக்கலில் உதவி ஆசிரியராக பணிபுரிந்து 2009ம் வருடம் பணி ஓய்வு பெற்றார்.

6. என் தகப்பனார் பணிஓய்வு பெறும்போது எவ்வளவு தொகை பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பணிஓய்வு பெற்ற தொகையிலிருந்து எனது தகப்பனார் நாமக்கலில் அன்பு நகர் என்ற பகுதியில் ஒரு காலியிடம் வாங்கி வீடு கட்டினார் என்றால் சரியல்ல என்னுடைய வருமானத்திலும் மற்றும் ரெப்போ வங்கியில் கடன் பெற்று மாதத்தவணையாக ரூ.9,500/– செலுத்தி மேற்கண்ட வீடு கட்டப்பட்டது.

7. மேற்கண்ட வாடகைக்கு விடப்பட்டதா என்றால் 3 மாதத்திற்கு வாடகைக்கு விடப்பட்டது அதன்பிறகு எனது தாய், தகப்பனார் அந்த வீட்டை பயன்படுத்திக்கொண்டனர். மேற்கண்ட வீடு 5 வருடத்திற்கு மாத வாடகையாக ரூ.10,000/– அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டு வாடகைத் தொகையை நான் தான் பெற்று வந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

8. நான் வங்கியில் கடன் வாங்கியது என்பது தவறு என்றாலும், என்னுடைய வருமான வரியிலிருந்து விலக்கு பெறுவதற்காக வங்கி ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2019ம் வருடம் அக்டோபர் மாதம் மேற்கண்ட வீடு விற்கப்பட்டது என்றால் சரிதான்.

9. நான் கல்லூரியில் படிக்கும் போது 2 செமஸ்டருக்கு ரூ.40,000/– மற்றும் ரூ.35,000/– ஆகிய தொகைகளை மூத்த சகோதரியின் கணவர் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. ஸ்டேட் பேங்கில் என்னுடைய கல்லூரி படிப்பிற்காக கடன் பெற்று நான் வேலைக்கு சென்ற பிறகு மேற்கண்ட கடனை என்னால் செலுத்தப்பட்டது.

10. மூத்த சகோதரியிடமிருந்து 2 முறை தங்க செயின் வாங்கி வங்கியில் வைத்து அடமானம் பெற்றுக்கொண்டேன் என்றாலும், அந்த நகையை மீட்பதற்கு மூத்த சகோதரி தான் பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என்னுடைய நண்பர் பாலாவிடம் கடன் பெற்ற வகையில் அதற்குரிய வட்டியை என்னுடைய மூத்த சகோதரி 2 1/2 வருடங்கள் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல நான் பாலாவிடம் கடனே பெறவில்லை.

11. என்னுடைய நண்பர் ஹோட்டல் அன்னபூர்ணா அவர்களின் மகன் திருமணத்திற்காக நான் என்னுடைய மூத்த சகோதரியிடம் 1 1/2 பவுன் வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கல்லூரியில் சேரும்போது மூத்த சகோதரி அரை, அரை பவுன்களில் இரண்டு தங்க மோதிரங்கள் கொடுத்தார் என்றால் சரியல்ல.

12. தாவா சொத்துக்கள் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3 ஏக்கர் 60 அல்லது 3 ஏக்கர் 65 செண்ட் இருக்கும். அதனுடைய சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லாத காரணத்தால் தான் தாவா சொத்தின் விஸ்தீரணம் மற்றும் சர்வே எண் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

13. தாவா சொத்தை வங்கியில் அடமானம் வைத்து கடனாக ரூ.7,00,000/- என்னுடைய அம்மா வாங்கியுள்ளார் என்றாலும், அதன் நிலுவை தொகை ரூ.11,00,000/- என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட கடன் பாக்கி நிலுவைக்கு என்னுடைய சகோதரிகள் ரூ.2,20,000/- செலுத்தியுள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

14. என் தந்தை பிறந்த ஊர் நாமக்கல் மாவட்டம் ரெட்டிப்பட்டி என்றால் சரிதான். என்னுடைய தாய், தகப்பனார் கணேசபுரம் என்ற பகுதியில் வாடகை வீட்டில் நாமக்கல் மாவட்டத்தில் குடியிருந்தார்கள். அதன்பிறகு என்னுடை பெற்றோர்கள் சொந்த வீட்டிற்கு சென்றுவிட்டார்கள்.

15. நானும், எனது தந்தையும் நேசமாகத் தான் இருந்தோம். இந்த வழக்கில் வாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித பங்கும் இல்லை என்றாலும், அதற்கு காரணம் எனது தாயார் தாவா சொத்துக்களை எனது பெயரில் உயில் எழுதி

வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயிலானது போலியானது என்றாலும், அதில் என்னுடைய தயார் கையொப்பம் இல்லை என்று வாதிகள் எதிர்வாதம் செய்கிறார்கள் என்றால் சரியல்ல.

16. மேற்கண்ட உயில் பதிவு செய்யப்படாத உயில் என்றால் சரிதான். அந்த மாதிரி உயில் இருக்கிறது என்று எப்போது எனக்கு தெரியவருகிறது என்றால் 11.08.2019 அன்றைய தேதியில் என் அம்மாவின் புண்ணியதானத்தன்று தெரிந்தது. வா.சா.ஆ.4 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பு 11.06.2020 தேதியில் எனது தகப்பனார் மற்றும் வாதிகளுக்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் எழுதிவைத்த உயிலை Probate செய்ய போவதாகவும், அதற்கு எனது தகப்பனார் மற்றும் வாதிகள் எந்தவித ஆட்சேபணையும் இல்லை என தெரிவிக்கும் படி வா.சா.ஆ.4ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17. வா.சா.ஆ.4 ஆவணத்தில் சொத்து விவரங்கள் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேலும் உயிலின் நகலும் வா.சா.ஆ.4 உடன் இணைக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4ல் உள்ள சங்கதிகளை மறுத்தும், உயிலின் நகலை அனுப்பி வைக்குமாறு என்னுடைய சகோதரிகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பான வா.சா.ஆ.5 ஆவணம் 02.07.2020 அன்று அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான்.

18. வா.சா.ஆ.6 ஆன பதிலறிவிப்புடன் எனது தாயார் எனக்கு எழுதிவைத்ததாக சொல்லக்கூடிய உயிலின் நகலை வா.சா.ஆ.7ஐ அனுப்பி வைத்தேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணமான 27.07.2020 அன்று வாதிகள் தங்களுடைய பதிலறிவிப்பில் உயிலிலுள்ள வாசகங்கள் போலியானவை என்றும், தங்களுடைய தாயார் கையெழுத்து அதில் இல்லை என்றும் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளனர் என்றால் சரிதான்.

19. அதன்பின்னிட்டு இன்றையதேதிவரை Probate OP தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மீண்டும் சாட்சி தெரியவில்லை என்று கூறினார். வா.சா.ஆ.4 அறிவிப்பில் என்னுடைய தாயாருக்கு கேன்சர் இருப்பதாக உறுதி செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். என் தாயார் எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில் போலியானது என்பதாலும், அதிலுள்ள கையெழுத்து தாயாருடையது இல்லை என்பதாலும், இதுநாள் வரை Probate OP அதன் காரணமாகத் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

20. உயில் எழுதிவைத்ததாக சொல்லப்படும் தேதியில் என் தாயாருக்கு சுயநினைவு இல்லை என்றும், அவர் சுயமாக சிந்தித்து சுயவிருப்பத்தின்பேரில் உயில் வைக்கவேண்டிய சூழ்நிலை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த உயிலானது ஈரோட்டில் தயார் செய்யப்பட்டு பின்னர் நாமக்கலில் சாட்சிகளின் கையொப்பம் பெறப்பட்டு நோட்டரி கையெழுத்து பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

21. எனது தாயார் புற்று நோய்க்காக சென்னை ராமச்சந்திரா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தாரா என்றால் மருத்துவ தொடர் சிகிச்சை மேற்கண்ட மருத்துவமனையில் எடுத்துவந்தார், 22.10.2018க்கு பிறகு தான் மேற்கண்ட மருத்துவமனையில் புற்றுநோய்காக சிகிச்சை பெற்று வந்தார்.

22. என் தாயார் புற்று நோயாளும் மற்றும் அதற்குரிய சிகிச்சையின் காரணமாகத் தான் இறந்தார் என்றால் சரியல்ல. என் தாயார் மாரடைப்பால் தான் இறந்தார். 1ம் வாதிக்கு ரூ.1,30,000/- மற்றும் 2ம் வாதிக்கு ரூ.2,50,000/- காசோலைகளாக கொடுக்கப்பட்டது தற்போது என்னிடம் காட்டப்படும் காசோலையின் நகல்கள் என்றால் சரிதான். அந்த காசோலைகளிலுள்ள கையொப்பமானது என் தந்தையுடையது தான், அது அவருடைய கையொப்பமாகும். உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகளை நான் அழைத்து வந்து விசாரிக்கப் போகிறீர்களா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்கிறேன்.

**வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**